காக்கை கூட்டம்

கொல்லி மலை அடிவாரத்தில் ஒரு விவசாயி சோளம் விதைக்கிறார். பக்கத்து மரத்திலிருந்து ஆறு காக்கைகள் பசியோடு காத்திருக்கின்றன. சோளம் விளைந்து வரும் வேளையில், காக்கைகளை பயமுறுத்த சோளக்கொல்லை பொம்மை ஒன்றை வைக்கிறார். ஆனால் மதிநுட்பமான காக்கை கூட்டம் அவ்வளவு எளிதில் பயந்து ஓடவில்லை.

லியோ லியோனி வண்ணச் சித்திரங்கள் மூலம் மனித குலமும் விலங்கினமும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ வேண்டிய அவசியத்தை, குழந்தைகளுக்கு புரியும் வகையில் நேர்த்தியாக இந்தக் கதையில் படம் படித்துக் காட்டுகிறார். மேலும் பல பிரச்சினைகளுக்கு வியக்கத்தக்க எளிய தீர்வுகள் இருக்கும் சாத்தியத்தையும் காட்டுகிறார்.

காக்கை கூட்டம்

ரம்மியமான கொல்லி மலை அடிவாரத்தில், சரியான பருவத்தில் பெய்த மழையை நம்பி, தனது வளமான வயலில் சோளம் விதைத்தார் ஒரு விவசாயி.

மகிழ்ச்சியாகத் தான் இருந்திருக்கும்
அவர் வாழ்க்கை, அந்த ஆறு காகங்கள்
மட்டும் இல்லாமல் இருந்திருந்தால். . .

சோளக்கதிர் முற்ற ஆரம்பிக்கும்போது,
காக்கைகள் வயலில் இறங்கி
சோளத்தை கொத்தி திங்க
ஆரம்பித்தன.

விவசாயி காக்கைகளை விரட்ட என்னென்னவோ செய்து பார்த்தார். அவர் இந்தப்பக்கம் திரும்பினால் போதும், காக்கைகள் பயிரை மொட்டை அடித்து விடும். கடைசியாக விவசாயி சோளக்கொல்லை பொம்மை ஒன்றை வயலின் நடுவில் நிறுத்தி வைத்தார்.

கையில் குச்சியுடன் இருந்த அந்த உருவத்தைப் பார்த்து காக்கைகள் மிரண்டு போயின. கூடிப் பேசின. “அந்த ஆளை பயமுறுத்த வேண்டும். என்ன செய்யலாம்?” என்று ஆலோசித்தன. .

“மொத்த வயலையும் கொளுத்தி விடலாம்” என்றது ஒரு காக்கை.

“சோளமும் எரிந்து போகுமே. பிறகு சாப்பாட்டிற்கு என்ன செய்வது?” என்றன மற்ற காகங்கள்.

பலபல திட்டங்களை விவாதித்த பின் இறுதியாக ஒரு பயங்கரமான கழுகு பட்டம் ஒன்றை செய்ய முடிவு செய்தன.

மரப்பட்டைகளையும் சருகுகளையும் வைத்து ஒரு கோரமான பறவை உருவத்தை செய்தன.

அடுத்த நாள் காலை அந்த கழுகுப் பட்டத்தை இழுத்துக்கொண்டு வயலின் மேல் பறந்தன காக்கைகள். இதைப் பார்த்து பயந்த விவசாயி ஓடிப் போய் குடிசைக்குள் ஒளிந்து கொண்டார்! "இன்னும் அதிபயங்கரமான சோளக்கொல்லை பொம்மை ஒன்றை செய்ய வேண்டும்" என்று நினைத்தார்.

கைகளில் இரண்டு பட்டாக் கத்திகளுடன் மிகப் பெரிய சோளக்கொல்லை பொம்மை ஒன்றை செய்து வயலில் வைத்தார் விவசாயி. அது ஆங்காரத்துடன் கத்துவது போல இருந்தது. “இப்ப பாக்கலாம்” என்றார் விவசாயி.

இந்த புதிய உருவத்தைப் பார்த்த காக்கைகள் இன்னும் பெரிய ஒரு கழுகுப் பட்டத்தை செய்து வயலின்மீது இங்கும் அங்குமாக பறந்தன. இதைப் பார்த்து நடுநடுங்கிப் போன விவசாயி குடிசையை விட்டு வெளியே வரவே இல்லை.

இதையெல்லாம் தன் மரப் பொந்தில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒரு ஆந்தை "யாரிதில் பெரிய மடையன் தெரியவில்லையே" என்று தலையில் அடித்துக்கொண்டது.

சரியான பராமரிப்பு இல்லாமல் சோளப் பயிர் வாடுவதைக் கண்டு பொறுக்க முடியாமல், விவசாயியிடம் பேசச்சென்றது ஆந்தை.

“காக்கைகளிடம் சமாதானமாய் போய்விட வேண்டியது தானே” என்று கேட்டது.

“காலம் கடந்த யோசனை” என்று கோபப்பட்டார் விவசாயி.

ஆந்தை சொன்னது “பேச்சுவார்த்தை நடத்த எப்போதும் நல்ல நேரம் தான்”

ஆந்தை காக்கைகளிடமும் சென்று பேசியது. சோளப் பயிர் வாடிநிற்பதை கேள்விப்பட்ட காகங்கள் "இப்போது என்ன செய்வது" என்று திகைத்தன.

“விவசாயியிடம் போய் பேசுங்கள். பேசினாலே பிரச்னைகள் தீர்ந்துவிடும்” என்று அறிவுரை சொன்னது ஆந்தை.

விவசாயியும் காகங்களும் ஆந்தையின் பொந்தருகே சந்திக்க ஒத்துக்கொண்டனர். ஆந்தையின் முன்னிலையில் பேச்சுவார்த்தை தொடங்கியது. காரசாரமாக சண்டையாக ஆரம்பித்தாலும் நேரம் செல்லச் செல்ல அமைதியாக சுமுகமாக நண்பர்களுக்குள் நடக்கும் உரையாடலாய் முடிந்தது.

“உங்கள் உற்சாக குரல் ஒலி கேட்காமல் எனக்கு பொழுதே போகவில்லை” என்றார் விவசாயி.

“சோளத்தை கொத்த முடியாமல் நாங்களும் திண்டாடினோம்” என்றன காக்கைகள். எல்லோரும் சிரித்துப் பேசிக்கொண்டு மகிழ்ச்சியாய் இருந்தனர்.

“நாம் ஆந்தைக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். எங்கே ஆந்தை?” என்று தேடினார் விவசாயி. ஆந்தையை எங்கும் காணோம்.

எல்லோருமாக வயலுக்குப் போனார்கள். சோளக்கொல்லை பொம்மையிடம் ஏதோ ஒரு மாற்றம்! அது இப்போது முறைக்கவில்லை புன்னகையுடன் இருந்தது! பொம்மையின் கையில் உட்கார்ந்து கொண்டிருந்தது ஆந்தை. “என்ன ஆயிற்று” என்று எல்லோரும் வியந்தனர்.

“மாயாஜாலம்!” என்று சிரித்தது ஆந்தை

முற்றும்.